[2022 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் தொழில் மற்றும் அதற்கான பாடத் திட்டங்கள் பெரும்பாலும் கடல் வளத்தைச் சார்ந்தே அமையப் பெற்றுள்ளன. திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் பகுதியில் உள்நாட்டு மீன் தொழில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மீன்வளக் கல்லூரி அமையும்பட்சத்தில், மாணவர்கள் கடல் மீன்பிடித் தொழில் குறித்த படிப்புகள் மேற்கொள்வது இயலாது என்பதால், திருவண்ணாமலை மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. தேவைப்படும்பட்சத்தில் அம்மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையும் அனுமதியும் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

215—

துணை மின் நிலையம்

*59329—திரு. இ. கருணாநிதி:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, அஸ்தினாபுரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 4]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2022–2023 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் 100 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அவற்றில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, சென்னை தெற்கு, 33 KV அஸ்தினாபுரம் புதிய துணை மின் நிலையம் அமைக்க அஸ்தினாபுரம் கிராமத்தில் 0.21 ஹெக்டேர் பரப்பளவு உள்ள அரசு களம் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு முன் நுழைவு அனுமதி பெறப்பட்டு, நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லாவரம் தொகுதியில் மின் பற்றாக்குறை காரணத்தினால் மின் வெட்டு ஏற்படுகின்றது. அஸ்தினாபுரத்தில் மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்தேன். கடந்த மூன்றாண்டுக்காலமாக அந்த இடத்திற்காக, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இந்த இடத்தின் பழைய சர்வே எண் 54/9. Field Register–அடங்கலில் தமிழ்நாடு மின்சார வாரியம் எனப் பதிவு செய்யப்பட்டது. கடந்த 3 ஆண்டுக் காலமாக நீதிமன்றத்தில் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தினால் அங்கு துணை மின் நிலையம் அமைக்கத் தாமதம் ஏற்பட்டது.

அதேபோன்று, கீழ்க்கட்டளை துணை மின் நிலையம் அமைக்க, துறைவாரியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நிலம்

தேர்வு செய்யப்பட்டு, சர்வே எண் 23197/8 அனாதீனம் நிலம் மின் துறைக்கு மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரையும் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளையும் விரைந்து முடித்து, அங்கு துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஓராண்டில் 47 புதிய துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தத் துணை மின் நிலையம் இந்த ஆண்டுக்கான பட்டியலில் சேர்க்கப்பட்டு, விரைவாக அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதியில் தற்போது கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லை. மின் துறை குறித்த பிரச்சினைகள் வந்தபோது, தாம்பரம் முடிச்சூர் பகுதிக்கு 6 கி.மீ. செல்ல வேண்டியுள்ளதால், கடந்த காலத்தில் அது நிறைவேற்றப்பட்டு, அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதை விரைந்து முடித்து பல்லாவரம் தொகுதிக்கென்று தனியாக ஒரு மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம் கட்டப்படுமா? அதே நேரத்தில் குரோம்பேட்டை, சாந்தி நகர் பகுதியில் ஒரு பெரிய துணை மின் நிலையம் இருக்கின்றது. அங்கே அந்த இடத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூரில் 50 கோடி ரூபாய் திட்ட

2022 மே 4]

மதிப்பீட்டில் 1 இலட்சம் மின் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் 33/11 KVA *துணை மின் நிலையம் அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. அதனால் பம்மல், பொழிச்சலூர், அனகாபுத்தூர், குரோம்பேட்டை, நாகல்கேணி பகுதிகள் பயன்பெறும். ஆகவே, அந்தத் துணை மின் நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது வரும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் கோட்டத்தைப் பொறுத்தவரையில், 6,65,000 மின் இணைப்புகள் பயன்பாட்டில் உள்ளன. இந்தக் கோட்டம், இருக்கின்ற கோட்டங்களிலேயே மிகப் பெரிய கோட்டமாக, அதிக மின் நுகர்வோர்களைக் கொண்ட கோட்டமாக உள்ளது. அதை இரண்டாகப் பிரித்து, பல்லாவரத்தில் புதிய கோட்டம் உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. விரைவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் பல்லாவரம் புதிய மின் கோட்டம் தொடங்கப்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

துணை மின் நிலையங்கள் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கின்றார். விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*